



15 einer, der etwas erstrebt
16 und alle
17 wie folgt, im einzelnen
18 einladen

# ஆரோவில்

8 Durst
9 was heute vorhanden ist
10 im Vgl. zum Unterhalt
11 hoch, höher
12 tatsächlich, wahr, echt
13 zum Leben verhelfend
14 Begeisterung

1 guter Wille
-உ.. 2 zeigt Besitz an
ஓர் 3 (adj.) eins
4 alle Personen
5 -உ.. zu, für
6 Grüße
7 [illegible]



I நல்லெண்ணமுடையோர் அனைவருக்கும் ஆரோவிலின் வாழ்த்துக்கள். II முன்னேற்ற தாகமுடையோர், இன்றுள்ள வாழ்வைவிட உயர்ந்த உண்மையான ஒரு வாழ்விற்காக ஆர்வம் கொள்வோர் அனைவரையும் ஆரோவிலுக்கு வருமாறு அழைக்கிறோம்.

# ஒரு கனவு

பூமியில் எங்காவது எந்த நாடும் தனது என்று சொந்தம் கொண்டாட முடியாத ஓர் இடம் இருக்க வேண்டும். அங்கு நல்லெண்ணமும், உண்மையான ஆர்வமும் கொண்டவர்கள் உலகக் குடிமக்களாக, பரம சத்தியத்துக்கு மட்டுமே கட்டுப்பட்டவர்களாக வாழ இயல வேண்டும். அங்கு அமைதியும், இசைவும், ஒற்றுமையும் நிலவ வேண்டும். அங்கு மனிதனுடைய போர்க் குணங்களின் சக்திகளெல்லாம் அவனுடைய துன்பங்களுக்கும், அவல நிலைகளுக்கும் காரணமாக இருப்பவற்றை வெல்வதற்கும், அவனுடைய பலவீனங்களையும், ஆற்றல் திறன் இன்மையையும் நீக்கி வெற்றியடைவதற்கும் பயன்படுத்தப்பட வேண்டும். அங்கு ஆசைகளையும் உணர்ச்சி வெறிகளையும் திருப்தி செய்வதைக் காட்டிலும், பொருள் இன்பங்களையும் சிற்றின்பங்களையும் நாடுவதைக் காட்டிலும், அதிக முக்கியத்துவம் ஆத்மாவின் தேவைகளுக்கும், முன்னேற்ற ஆர்வத்திற்கும் இருக்க வேண்டும். அந்த இடத்தில் குழந்தைகள் தங்கள் ஆன்மாவுடன் இடையறாத தொடர்பு கொண்டு முழுமையாக வளர்வும் முன்னேறவும் முடியும். அங்கு அளிக்கப்படும் கல்வி, தேர்வுகளில் வெற்றி அடைவதற்காகவோ, சான்றிதழ்கள் பெறுவதற்காகவோ, பதவிகள் கிடைப்பதற்காகவோ இருக்காது. அதற்குப் பதிலாக, ஒருவரிடம் ஏற்கனவே இருக்கும் திறன்களை வளப்படுத்தவும், புதிய திறன்களை வெளிக்கொணர்வதற்கும் எல்லாவற்றையும் சீராய் அமைக்கும் வாய்ப்புகள் மட்டுமே இருக்கும். அங்கு உடலுக்கு வேண்டிய அடிப்படைத் தேவைகளை நிறைவேற்ற ஒவ்வொருவருக்கும் ஏற்றத் தாழ்வின்றி ஒன்று போல ஏற்பாடு செய்யப்படும். அங்குள்ள பொது அமைப்பில் ஒருவரது புத்திக் கூர்மை, ஒழுக்க, ஆன்மீக மேன்மைகள் எல்லாம் வாழ்க்கை இன்பங்களையோ அதிகாரங்களையோ அதிகரிக்கப் பயன்படாது; அதற்குப் பதிலாக, அவ்வுயர்வுகளின் காரணமாக அவருடைய கடமைகளும், பொறுப்புகளும் அதிகமாகும். ஓவியம், சிற்பம், இசை, இலக்கியம் போன்ற எல்லா வகையான கலை வடிவங்களிலும், அழகை உணரும் வாய்ப்பு அனைவருக்கும் கிடைக்கும். அவை அளிக்கும் மகிழ்ச்சியை அவர்கள் அடைவது அவரவரது ரசனைத் திறனின் அளவைப் பொருத்து இருக்கும். அது அவர்களுடைய சமூக, பொருளாதார அந்தஸ்தைப் பொருத்து இருக்காது. ஏனெனில் இந்த இலட்சிய பூமியில் பணம் நாயகமாய் இருக்காது. அங்கு ஒருவருடைய சொந்த திறமைக்குரிய மதிப்பு பொருட் செல்வத்தினாலோ சமூக அந்தஸ்தினாலோ வரும் மதிப்பை விட அதிக முக்கியத்துவம் பெறும். அங்கு வேலை என்பது வயிற்றுப் பிழைப்புக்குரிய வழியாக இருக்காது. அதற்குப் பதிலாக அது தன்னை வெளிப்படுத்திக் கொள்ளவும், தனது திறமைகளையும் சாத்தியக் கூறுகளையும் வளர்த்துக் கொள்ளவும் ஒரு வாய்ப்பாக அமையும். அதே சமயம், அது சமூகம் முழுவதற்குமாகச் செய்யும் சேவையாகவும் இருக்கும். பதிலுக்கு சமூகம் ஒவ்வொருவருடைய வாழ்க்கைத் தேவைக்கும், வேலை செய்வதற்கான செயற்களத்துக்கும் வழி செய்யும். வழக்கமாக, போட்டி, போராட்ட அடிப்படையில் உள்ள மனித உறவுகள், வேலைகளை ஒருவரை ஒருவர் மிஞ்சி சிறப்பாக செய்யவும், ஒத்துழைக்கவும் தேவையான மனித நேய உறவுகளாக அங்கு இருக்கும்.

*- ஸ்ரீ அன்னை, ஆகஸ்டு, 1954*



# ஆரோவில் சாசனம்

1. ஆரோவில் குறிப்பிட்ட எவருக்கும் சொந்தமானது அல்ல. ஆரோவில் மனித இனம் முழுவதற்கும் சொந்தமானது ஆகும். ஆனால், ஆரோவி-ல் வசிக்கவேண்டும் என்று ஒருவர் விரும்பினால், அவர் தெய்வீக உணர்விற்கு விருப்பத்துடன் தொண்டு செய்பவராக இருக்கவேண்டும்.
2. ஆரோவில் முடிவுறாத கல்வி, இடையறாத முன்னேற்றம், மூப்புறாத இளமை ஆகியவற்றின் இருப்பிடமாக விளங்கும்.
3. ஆரோவில் சென்ற காலத்திற்கும், வருங்காலத்திற்கும் இடையே ஒரு பாலமாக இருக்க விழைகிறது. புற உலக, அக உலகக் கண்டுபிடிப்புகள் அனைத்தையும் பயன்படுத்தியபடி ஆரோவிலானது துணிவுடன் எதிர்கால நன்முடிவுகளை நோக்கி துடிப்புடன் முகிழ்த்து எழும்.
4. ஆரோவில் மனித குல ஒருமைப்பாட்டிற்கு ஓர் உருவம் கொடுப்பதற்கான உலகியல் மற்றும் ஆன்மீக ஆராய்ச்சிக்குரிய நிலையமாக விளங்கும்.

# பொதுவான தகவல்கள்

1968ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 28ஆம் தேதி ஆரோவில்லின் துவக்க நிகழ்ச்சியில், இந்தியாவின் எல்லா மாநிலங்களில் இருந்தும், 124 நாடுகளில் இருந்தும் வந்திருந்த அதன் பிரதிநிதிகள், தங்கள் தாய்நாடுகளிலிருந்து கொண்டுவரப்பட்ட ஒரு கைப்பிடி மண்ணை, மனிதஇன ஒற்றுமையின் அடையாளத்தை வெளிப்படுத்தும் வண்ணம், எதிர்கால நகரத்தின் மைத்தின் அருகேயுள்ள, தாமரை வடிவத் தாழியினுள் இட்டனர்.

ஒரு சமயம், கிராம வயல்களுடன் பின்னிப் பிணைந்து வறண்ட சிவப்பு பீடபூமியாக இருந்த ஆரோவில் முதல் முன்னோடிகளின் தளராத முயற்சியால் பசும்புல்வெளி நிலத்தோற்றமாக முற்றிலும் மாறியுள்ளது. ஆரோவில் நகரம் வடிவம் கொள்வதற்கான வளர்ச்சியைத் தொடங்கியுள்ளது. அதன் மையப்பகுதியில் அமைந்துள்ள மாத்ரிமந்திருக்கு சுற்றுத் தள்ளி, பன்னாடு, பண்பாடு, குடியிருப்பு, தொழிற்கூடம் ஆகிய நான்கு மண்டலங்கள் அமைந்துள்ளன. அவை ஒவ்வொன்றும் சமுதாய வாழ்க்கையின் முக்கிய அம்சத்தைக் குறிக்கின்றன. நகரத்தைச் சுற்றி முழுவதும் பசுமைப்பகுதி அமைந்துள்ளது.

1988ஆம் ஆண்டு ஆரோவில் நிறுவனச் சட்டத்தை இந்திய அரசு இயற்றியது. ஆரோவிலின் சாசனத்துக்கு ஏற்றபடியுள்ள ஆரோவில் வளர்ச்சிக்கும், நீண்ட காலத்திட்டங்களை சிறப்பாக நிர்வாகம் செய்வதை மேற்பார்வையிடவும், ஒரு சட்டரீதியான அமைப்பை உருவாக்க அச்சட்டம் வழிவகை செய்திருக்கிறது.

கடந்த 33 ஆண்டுகள் காலமாக, தனியார் நன்கொடை-யாளர்கள், நம்நாடு மற்றும் அயல்நாடுகளைச் சேர்ந்த அரசு நிறுவனங்கள் (அமைப்புகள்) மற்றும் அரசு சாரா அமைப்புகள் அளித்த உதவியால் ஆரோவில் சமுதாயம் ஒரு வளர்ந்து வரும் சமுதாயமாக விரிவடைந்து கொண்டே போகிறது. இப்போது பல்வேறு பரப்பில் அமைந்த 90 குடியிருப்புகளில், இந்தியாவில் இருந்தும் மற்றும் 30-35 அயல்நாடுகளில் இருந்தும் வந்துள்ள மொத்தம் 1700 பேர் வசிக்கின்றனர்.

ஆரோவிலைச் சுற்றியுள்ள கிராமங்களில் வசிக்கும் 40,000 பேருக்கு வேலை வாய்ப்புக்கு ஒரு முக்கிய ஆதாரமாக ஆரோவில் விளங்குகிறது. அவர்களுடைய அடிப்படை வசதிகளை முன்னேற்றவும், கல்வி, நலவாழ்வு அளிக்கவும் ஆரோவில் உதவி செய்து வருகிறது.

---

மேலும் விவரங்கட்கு கீழ்க்கண்ட முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

ஆரோவில் விருந்தினர் சேவை (Auroville Guest Service)
சோலார் கிச்சன், ஆரோவில் - 605 101 தமிழ் நாடு, இந்தியா
தொலைபேசி : (0413) 2622 704 (காலையில் மட்டும்)
மின்னஞ்சல்: avguests@auroville.org.in

அல்லது www.auroville.org என்ற ஆரோவில் இணைய தளத்தை பார்க்கவும்.